# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

**අංක 12,210 — 1960 ඔක්තෝබර් 7 වැනි සිකුරාදා — 7.10.1960**

12,210 ம் இலக்கம்—1960 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 7 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]


| | பக்கம் |
|---|---|
| மகாதேசாதிபதியின் பிரகடனங்கள் .. .. | — |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. | — |
| அரசாங்க அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் .. | — |
| நீதாசன சேவை அதிகார சபையின் நியமனங்களும் பிறவும்.. | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | — |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. | 651 |
| விலைக்கட்டளைகள் .. .. .. | — |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் .. | — |
| இலங்கை அரசாங்கக் கணக்கு விபரங்கள் .. | — |
| வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. | — |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் .. | — |
| மானுமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| " மதுவரிச் சட்ட " அறிவித்தல்கள் .. .. | — |


## அரசாங்க அறிவித்தல்கள்

**1952ம் ஆண்டில் 25ம் இலக்க கடற்றொழில் (திருத்த) சட்டம் பிரிவு 18அ (3), திருத்தியமைக்கப்பட்ட 1956ம் ஆண்டில் கடற்றொழில் (திருத்த) சட்டம் 30இன் கீழ் உள்ள அறிக்கை**

1940ம் ஆண்டு 24ம் இலக்க கடற்றொழில் சட்டம், பிரிவு 18 அ (1) இனது 1952ம் ஆண்டின் 25ம் இலக்கமும் 1956ம் ஆண்டின் 30ம் இலக்கமும் கொண்ட கடற்றொழிற் (திருத்த) சட்டத்தினால் திருத்தம் செய்த பிரகாரம், வர்த்தக கடற்றொழில் கௌரவ மந்திரி ஜே. டி. வீரசேகரா அவர்கள், தெற்கே இரும்புக்கூடல் பாடல் தென்பாகத்திலிருந்து வடக்கே தாழையடி தென்பாக எல்லைக்குள் உள்ள இலங்கை நீர்ப்பரப்பில் மீன்பிடி உரிமைக்காக புத்தள மாவட்டத்தில் உள்ள தலவில்லை,பாலைக்குடா என்னும் ஊர்களில் நிரந்தரவாசிகளாய் உள்ள மீன்பிடிகாரர்களுக்கும் நீர்கொழும்பு, மட்டக்குழியா, சிலாபம், வென்னப்புவா, உல்கொத்தியாவ, த்ளகேனு, தூவ, குடப்பாடுவ, தொடுவாவ, வெல்லிக்கம்பிட்டிய ,கட்டு நேரியா, நைனமாடமா, கமல்துறை, பொறுத்தோட்டை, குழிஞ்சாடி, மாற வில்லை, வாதுவ, கம்மலா, முடுக்காத்துவ முதலிய இடங்களிலிருந்துவரும் மீன்பிடிகாரர்களுக்கு மிடையே எழுந்துள்ள வியாச்சியத்தையிட்டுப் பகிரங்க விசாரணைக்காவும், அறிக்கைக்குமாகவும், என்னிடம் ஒப்பித்துள்ளார்.

2. இவ்வியாச்சியத்தையிட்ட விடயச்சடம் பின்வருமாறு :—

தலவில்லை, பாலைக்குடா, என்னும் இடங்களின் நிரந்தர வாசிகளாகிய மீன்பிடிகாரர் தெற்கே இரும்புக்கூடல்பாடு தெற்கெல்லையிலிருந்து வடக்கே தாழையடிப்பாடு தெற்கெல்லையளவில் உள்ள இலங்கை நீர்ப்பரப்பில் நீர்கொழும்பு, மட்டைக்கொற்றுவ, குடாப்பாடுவ, நைனமடம், கமால்துறை, பொறுத்தோட்டை, தொடுவாவ, தலகேனு, துவா, வெலிக்கம்பிட்டிய, கட்டுநேரிய, குழிஞ்சாடி, மாறவில்லை, வாதுவ, கம்மாலா, முடுக்கத்துவ முதலிய இடங்களிலிருந்து தலவில்லைக்குவந்து மேற்கூறிய நீர்ப்பரப்பில் மீன்பிடிப்பதை ஆட்சேபிக்கிறார்கள். ஏனெனில் இது தங்கள் அன்றுடை வாழ்க்கைச் சீவியத்தைப் பாதிப்பதனால்.

3. இத்தால் இவ்வியாச்சியத்திற்குரிய எல்லா விபரங்களையும் மேற் கொடுத்திருக்காதபோதிலும், கௌரவ மந்திரி அவர்களால் மேற் கூறிய வியாச்சியத்துடன் சம்பந்தப்பட்ட அல்லது தற்செயலான கருமா விடயங்கள் யாவற்றையுமிட்டு விசாரணை செய்து அறிக்கை தயாரிக்கும்படி வேண்டப்பட்டுள்ளேன்.

4. இவ்வியாச்சியத்தில் கலந்துள்ளவர்களையும், சிரமம் உள்ளவர்களையும், இத்துடன் சம்பந்தப்பட்ட எல்லா விடயங்களையும், விரும்பினால் எழுத்துமூலம் கடற்றொழிற்றுறை அதிபருக்கு 1960 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 30 ம் தேதிக்கு முன் கிடைக்கக்கூடியதாகச் சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

5. இவ்வியாச்சியத்தையிட்டு கல்பிட்டியா வாடிவீட்டில் 1960 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 18 ம் தேதி காலை 10 மணிக்குப் பகிரங்க விசாரணை நடாத்தப்படும். அவ்விசாரணையில் சாட்சியம் கொடுக்கத் தகுதியுள்ள யாபேரும், நேராகவோ, வக்கீல்கள் மூலமோ அல்லது இரக்கமாய்ப் பேச முன்வருபவர்கள் மூலமோ சாட்சியம் கொடுக்கலாம். இச் சாட்சியம் வாக்குமூலமாகவோ அல்லது சாதன சம்பந்தமாகவோ சத்தியத்தின் மீது அளிக்கப்பட வேண்டும்.

ஒப்பம் : ஆர். டி. சொயிசா.

கொழும்பு,
1960 ம் ஆ செப்டெம்பர் மீ 21 ந் உ.
9697.

---

**4 A ம் மாதிரிப்பத்திரம்**

**1949 ம் ஆண்டின் 3 ம் இலக்க இந்தியர், பாகிஸ்தானிகள் (பிரஜா உரிமை) சட்டம் சட்டத்தின் 10 ம் பிரிவின்படி அறிவித்தல்**

1949 ம் ஆண்டின் 3 ம் இலக்க இந்தியர், பாகிஸ்தானிகள் (பிரஜா உரிமை) சட்டத்தின் 4 ம் பிரிவின் 1 ம் உட்பிரிவின்படி இதனகத்துள்ள அட்டவணையிற் செய்யப்பட்ட விண்ணப்பம் ஒவ்வொன்றையும் அங்கீகரிக்கும் கட்டளையை, இவ்வறிவித்தல் திகதி தொடக்கம் ஒரு மாதகாலத்துக்குள், பொது ஜனங்கள் எவரிடமேனுமிருந்து அத்தகை கட்டளை பிறப்பித்தற்கு மாருக யாதேனும் எழுத்துமூலமான தடையும் அத்தடைக்கு ஆதாரமான நியாயங்களையும் உண்மைகளையும் பற்றிய அறிக்கையும் ஒருமித்து எமக்குக் கிடைத்தாலன்றி,யான் பிறப்பிப்பேனென்று இந்தியர், பாகிஸ்தானிகளைப் பதிவுசெய்யும் அதிகாரி அல்பிறெட் எட்வின் கோக்கனி மொறக்கொட ஆகிய யான் அச்சட்டத்தின் 10 ம் பிரிவின்படி இத்தால் அறிவித்தல் கொடுக்கிறேன்.

தடைகூறும் அறிக்கை ஒவ்வொன்றிலும் தடை கூறுபவரின் முழுப்பெயரும் விலாசமும் இடப்படவேண்டும்.

அ. எ. கோக்கனி மொறக்கொட,
இந்தியர் பாகிஸ்தானிகளைப்
பதிவு செய்யும் அதிகாரி.

கொழும்பு,
1960 ம் ஆ செப்டம்பர் மீ 30 ந் திகதி.

அட்டவணை

| விண்ணப்ப இலக்கமும் திகதியும் | இலங்கைப் பிரஜையாகப் பதிவுசெய்யும்படி விண்ணப்பஞ் செய்பவரின் பெயரும் விலாசமும் |
|---|---|
| S 1664—28.7.51 .. | வேம்படி வையாபுரி, நாககாத்தனைத் தோட்டம், எற்பிட்டி |
| Y 8147—4.8.51 .. | முகமது சக்காறியா மகன் " எம். ஏ. எம் " செய்யது முகமது, 190, நெடுஞ் சாலை, ஆலி-எல. |
| Y 5213/W/Y—6.7.51 .. | செல்லமுத்து செல்லையா, நாப்பியர் நடுப் பிரிவு, றூக்கத்தனைத் தோட்டம், ஆலி-எல. |
| S 1115—18.7.51 .. | ஆறுமுகம் மகள் முருகாயி அல்லது இராக்கி, தலங்ககாத் தோட்டம், நாக்கியாதெனியா. |

10/17—1.

### 4 B ம் மாதிரிப்பத்திரம்

### 1949 ம் ஆண்டின் 3 ம் இலக்க இந்தியர், பாகிஸ்தானிகள் (பிரஜா உரிமை) சட்டம்

### சட்டத்தின் 10 ம் பிரிவின்படி அறிவித்தல்

1949 ம் ஆண்டின் 3 ம் இலக்க இந்தியர், பாகிஸ்தானிகள் (பிரஜா உரிமை) சட்டத்தின் 4 ம் பிரிவின் (1) ம், (2) ம் உட்பிரிவுகளின்படி இதனகத்துள்ள அட்டவணையிற் செய்யப்பட்ட விண்ணப்பம் ஒவ்வொன்றையும் அங்கீகரிக்கும் கட்டளையை, இவ்வறிவித்தல் திகதி தொடக்கம் ஒரு மாத காலத்துக்குள் பொது ஜனங்கள் எவரிடமேனுமிருந்து அத்தகைய கட்டளை பிறப்பித்தற்கு மாறாக யாதேனும் எழுத்துமூலமான தடையும் அத்தடைக்கு ஆதாரமான நியாயங்களையும் உண்மைகளையும்பற்றிய அறிக்கையும் ஒருமித்து எமக்குக் கிடைத்தாலன்றி யான் பிறப்பிப்பேனென்று இந்தியர், பாகிஸ்தானிகளைப் பதிவுசெய்யும் அதிகாரி அல்பிறெட் எட்வின் கோக்களி மொறக்கொட ஆகிய யான் அச்சட்டத்தின் 10 ம் பிரிவின்படி இத்தால் அறிவித்தல் கொடுக்கிறேன்.

தடைகூறும் அறிக்கை ஒவ்வொன்றிலும் தடைகூறுபவரின் முழுப்பெயரும் விலாசமும் இடப்படவேண்டும்.

அ. எ. கோக்களி மொறக்கொட,
இந்தியர் பாகிஸ்தானிகளைப்
பதிவுசெய்யும் அதிகாரி.

கொழும்பு,
1960 ம் ஆண்டு செப்டெம்பர் மீ 30 ந் திகதி.

அட்டவணை

| விண்ணப்ப இலக்கமும் திகதியும் | இலங்கைப் பிரஜையாகப் பதிவுசெய்யும்படி விண்ணப்பஞ் செய்பவரின் பெயரும் விலாசமும் | விண்ணப்பஞ்செய்பவர் இலங்கைப் பிரஜையாகத் தம்மைப் பதிவு செய்யும்பொழுதே, இலங்கைப் பிரஜையாகப் பதிவுசெய்ய விண்ணப்பஞ் செய்பவர் கோரும் ஒவ்வொருவரின் பெயரும் இனமுறையும் |
|---|---|---|
| D 1812—5.7.51 .. | சிவானு சுப்பையா, பனுக்குலத் தோட்டம், தும்மோதரை .. | மாரியம்மா (மனைவி) |
| D 1843—5.7.51 .. | அருணாசலம் பெருமாள், பனுக்குலத் தோட்டம், தும்மோதரை | சின்னம்மா (மனைவி), ஜெயலெச்சுமி (மகள்), இலெச்சுமி (மகள்), சந்திரகுமார் (மகன்) |
| I 5880—24.7.51 .. | வீரப்பத் தேவர் நாகலிங்கம், 17/1, தியேட்டர் வீதி, நாவலப்பிட்டி | வேலாயி (மனைவி), இராமச்சந்திரன் அல்லது வேலாயுதன் (மகன்), கிருஷ்ணமூர்த்தி அல்லது சுப்பிரமணியம் (மகன்), பாலகிருஷ்ணன் (மகன்), ஜெயசீலம் சின்னையா (மகன்), செல்வராஜ் (மகன்), இரத்தினசபாபதி (மகன்), மகேசுவரி (மகள்) |
| K 12668—5.8.51 .. | செங்காயன் முத்துச்சாமி, ரியன்சின் தோட்டம், போகவந் தலாவை | வீரம்மாள் (மனைவி) |
| L 2115/K—27.3.51 .. | சுந்தரம் பிச்சை தேவசகாயம், கிறேஸ்லன்ட் தோட்டம், இறம்புக்பிட்டி | பூரணம் (மனைவி) |
| M 666—28.11.50 .. | கறுப்பையா கறுப்பையா, ஒப்பல்கலேத் தோட்டம், இரத் தோட்டை | காமாச்சி (மனைவி), சுப்பையா அல்லது சின்னையா (மகன்), வேலு அல்லது அழகப்பன் (மகன்), சிவானு அல்லது ஆறுமுகம் (மகன்), சுந்தரம் அல்லது பழனி (மகன்), சுப்பிரமணியம் அல்லது சுப்பையா (மகன்), இரஞ்சிதம் (மகள்), சீதையம்மா (மகள்) |
| M 8681—31.7.51 .. | கறுப்பன் காத்தான், ஒப்பல்கலேத் தோட்டம், இரத்தோட்டை | வீரம்மா (மனைவி) |
| N 237—26.9.50 .. | கந்தர் ஆரோக்கியம், பறப்பாங்கந்தல் பெரியகுளம், பறப் பாங்கந்தல் | மாக்கறெட் (மனைவி), சிந்தாத்திரை (மகள்), அன்னம்மா (மகள்), அல்வின் (மகன்), செபஸ்ரியான்பிள்ளை (மகன்) |
| Y 6221/W—11.7.51 .. | முத்துச்சாமி சண்முகம், மேற் பிரிவு, ஊடுவரைத் தோட்டம், தெமோதரை | காமாச்சி (மனைவி), சீதை அல்லது இலெச்சுமி (மகள்), பொட்டு அல்லது அன்னக்குஞ்சி (மகள்), வீராசாமி அல்லது வேலு (மகன்), இராசு அல்லது பாலசுப்பிர மணியம் அல்லது முத்துச்சாமி (மகன்), கமலம் (மகள்) |
| Y 7864—6.7.51 .. | வையாபுரி குழந்தையன், கிளன் அல்பின் தோட்டம், வதுளை | பாலாயி (மனைவி), பெரியம்மை அல்லது கிருஷ்ணம்மா (மகள்), கந்தையா அல்லது கோவிந்தசாமி (மகன்), முருகையா (மகன்), சீரங்கன் (மகள்), சிவகணம் அல்லது சிவஞானம் (மகள்) |
| CC 2806—15.7.51 .. | பழனியாண்டி முத்துச்சாமி, அத்துக்கொடைப் பிரிவு, கொலின்டாத் தொகுப்பு, கேகாலை | பேச்சி (மனைவி), இராமசாமி அல்லது இராமன் (மகன்), பழனியாண்டி (மகன்), மாடத்தி (மகள்) |
| CC 5878—16.6.51 .. | குப்பன் பெரியான், நியாதுறுப் பொலேத் தோட்டம், வறக்கா பலை | ஐயம்மா (மனைவி) |
| CC 7284—18.6.51 .. | முருகையா சின்னச்சாமி, 4 ம் பிரிவு, அம்பான்பிட்டித் தோட்டம், கேகாலை | மாரியாயி (மனைவி), ஆறுமுகம் (மகன்), வள்ளியம்மா (மகள்), இலெச்சுமி (மகள்), பச்சைமுத்து (மகன்), பேச்சி (மகள்), இரமணி (மகள்), பெரியசாமி (மகன்), பழனியாண்டி (மகன்) |
| DD 2549—19.4.51 .. | வீரப்பன் முத்தையா, கீழ்ப் பிரிவு, லவான்ற் தோட்டம், எட்டியாந்தோட்டை | இராமாயி (மனைவி) |
| DD 3558—14.7.51 .. | வீரன் முத்துச்சாமி கைம்பெண் தொட்டமணி கோவிந் தம்மா, தெகலேசை மேற்பிரிவு, பனுவத்தைத் தொகுப்பு, எட்டியாந்தோட்டை | காத்தான் (மகன்) |
| DD 3933—15.7.51 .. | ஆறுமுகம் நடேசன், பம்பக்கமைத் தோட்டம், பறக்கடுவை.. | சிவகாமி (மனைவி), சரகண தேவி (மகள்) |
| DD 6966—16.6.51 .. | சொல்லமுத்து யோசேப்பு, இங்கோயாத் தோட்டம், கித்துட் கலை | வீராயி (மனைவி), பூச்சி அல்லது மாடத்தி (மகள்), கறுப்பாயி (மகள்) |
| D 886—24.7.51 .. | பழனியப்பன் முத்துச்சாமி, மினேரிக்கமைப் பிரிவு, பாதுக் கைத் தொகுப்பு, பாதுக்கை | இராமாயி (மனைவி), சந்தணம் அல்லது மாரிமுத்து (மகன்) முனியம்மா அல்லது அமராவதி (மகள்), முனியப்பன் அல்லது மருதமுத்து (மகன்), நாகப்பன் (மகன்), வேலாயுதன் (மகன்), செல்லத்துரை (மகன்), நாக ரத்தினம் அல்லது நவரத்தினம் (மகன்), செல்வதாசன் (மகன்), புஷ்பம் (மகள்) |

| விண்ணப்ப இலக்கமும் திகதியும் | இலங்கைப் பிரஜையாகப் திவுசெய்யும்படி விண்ணப்பஞ் செய்பவரின் பெயரும் விலாசமும் | விண்ணப்பஞ்செய்பவர் இலங்கைப் பிரஜையாகத் தம்மைப் பதிவு செய்யும்பொழுதே, இலங்கைப் பிரஜையாகப் பதிவுசெய்ய விண்ணப்பஞ் செய்பவர் கோரும் ஒவ்வொருவரின் பெயரும் இனமுறையும் |
|---|---|---|
| L/F 566-A—20.6.50 | சாக்கன் சொலமன் சத்தியசாகரம் அழகர், எமானுவேல், அலோயாத் தோட்டம், பேராதனை | அமிர்தமணி கோகிலம்மாள் (மனைவி), யோன் மத்தியூஸ் பிறுங் எமானுவேல் (மகன்) |
| S 2104—27.7.51 .. | சுப்பையா சுப்பிரமணியம் கைம்பெண் வள்ளியம்மா, திரு. சி. முத்தையா மேற்பார்த்து, 413 வது வீடு, 4 ம் பிரிவு, பாவற்குளம் திட்டம், பூவரசங்குளம், வவுனியா | சேவற்கொடி (மகன்) |
| T 390—6.7.51 .. | கறுப்பன் சின்னன், அரசினர் மருத்துவச்சாலை, தோப்பூர் .. | மாரியாயி (மனைவி), இராமன் (மகன்), இலெச்சுமணன் (மகன்), பெரியாத்தாய் (மகள்), கெவுரி ஐயா (மகன்), கந்தையா (மகன்) |
| Q 230—19.12.50 .. | சின்னச் சுப்பன் குமாரசாமி அல்லது குமாரவேல், சிமுறுப் பிரிவு, தங்கக்கலைந் தோட்டம், லிந்துலை | தெய்வானை (மனைவி), கனகாம்பாள் (மகள்), சாரதாம்பாள் (மகள்), சாலாச்சி (மகள்), இராமவேல் (மகன்), பெருமாள் (பெருமகன்), ஜெயராமு (மகள்) |
| C 3136-A—24.8.58 .. | சாள்ஸ் ஃபசால் இரகிம் மனைவி வில்லி கிறேஸ்பிள்ளை, 227, யூனியன் இடம், கொழும்பு 2 | பிலிப் குமார் (மகன்), றெபேட் கிளிபோட் இரகிம் (மகன்) டொக்ளஸ் ஸ்ரான்லி (மகன்) |

10/17-3.

## விளம்பரம்

1960 ம் ஆண்டு ஐப்பசி (ஒக்ரோபர்) மாதம் 19 ந் திகதி புதன்கிழமை அரசாங்க விடுமுறையாக இருப்பதால், 1960 ம் ஆண்டு ஐப்பசி (ஒக்ரோபர்) மாதம் 21 ந் திகதி வெளிவரவிருக்கும் இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட வேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல்களும் 1960 ம் ஆண்டு ஐப்பசி (ஒக்ரோபர்) மாதம் 15 ந் திகதி சனிக்கிழமை பி.ப. 12.30 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்துசேர வேண்டுமென இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு,
1960 ம் ஆண்டு புரட்டாதி (செப்டெம்பர்) மீ 27 ந் உ.

பேர்னார்ட் த சில்வா,
அரசாங்க அச்சகத் தலைவர்.

**1955 ம் ஆண்டு (ஜனவரி) தை மாதம் 1 ந் திகதி தொடக்கம் அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய திருத்தப்பட்ட கிரய விகிதங்கள்**

# " இலங்கை அரசாங்க வர்த்தமானி (கெசற்) "

**வெள்ளிக்கிழமைதோறும் வெளியிடப்படுவது**

1. *பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும்* **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.**

2. *தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன்,* **அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு,** *அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.*

3. *கிழமை நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 4.30 மணி வரையும், சனிக்கிழமைகளில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 1 மணி வரையும் காரியாலய நேரமாகும்.*

4. *கிழமை நாட்களில் பி. ப. 3.30 மணிக்கும், சனிக்கிழமைகளில் நண்பகல் 12 மணிக்கும் பணங் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.*

5. **சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும்.** *தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகனின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.*

6. *" நகலே "* **கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல், விசேஷமாக "ரைப்" அடித்தல்** *பிழைகளேயும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.*

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. *வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.*

9. *நியாயஸ்தலத்தின் கட்டளேயில் கொடுபடவேண்டிய விளம்பரங்கள் " சுப்பிறீம் கோட் புறொக்ரரல் "* **கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்** *படமாட்டா.*

10. **1955 ம் ஆண்டு (ஜனவரி) தை மாதம் 1 ந் திகதி** *தொடக்கம் அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் பின்வருமாறு :—*

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 10 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி | 5 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் | 60 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 120 | 0 |

*ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல்* **வேண்டும்.**

11. **வெள்ளிக்கிழமைதோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும்.** *அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.*

12. **வெளியாவதற்கு நான்கு வேலே நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி)** *அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.*

13. **ஒரு வருடத்திற்கு அல்லது அரை வருடத்திற்குரிய சந்தா, முன்பணமாக கொழும்பு, அரசாங்கப் பிரசுர நிலேய அதிபரால் பதிவுசெய்யப்படும்.**

14. **சந்தா விகிதங்கள்—**

| | ரூ. ச. | |
|---|---|---|
| ஒரு வருட சந்தா .. .. | 15 0 | .. ஒவ்வொரு பகுதிக்கும் |
| | 7 0 | .. ஓராம் பகுதியின் ஒவ்வொரு பிரிவுக்கும் |
| ஒவ்வொரு பகுதியினதும் தனிப் பிரதி .. | 0 25 | |
| | 0 31 | .. தபாற் செலவுடன் |
| ஓராம் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 10 | |
| | 0 14 | .. தபாற் செலவுடன் |

15. **கைவசமுள்ள பழைய பிரதிகளுக்கு இரட்டிப்புப் பணம் செலுத்தப்படல் வேண்டும். கொழும்பு, அரசாங்கப் பிரசுர நிலேய அதிபர் அவர்கட்கு விண்ணப்பிக்கவேண்டும்.**

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது